605 / 5

## 'அ' பிரிவு

### A1 வேற்றுமை

Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q1 திரு ஈஸ்வரன் _______ நற்செயலைப் பாராட்டினார்.

(1) மாணவர்களை
(2) மாணவர்களால்
(3) மாணவர்களுடன்
(4) மாணவர்களின்

Q2 அயராது உழைத்த _____________ ஓய்வெடுக்க நேரம் கிட்டவில்லை.

(1) உழவனின்
(2) உழவனை
(3) உழவனுக்கு
(4) உழவனிடமிருந்து

Q3 தேசிய ________________ முன்னிட்டு மாணவர்கள் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

(1) தினத்தை
(2) தினத்தில்
(3) தினத்தின்
(4) தினத்துக்கு

Q4 தாயார், தாம் தூக்கிக்கொண்டிருந்த _________________ குடை ஒன்றையும் பிடித்துக்கொண்டிருந்தார்.

(1) பைகளுக்கு
(2) பைகளுடன்
(3) பைகளின்
(4) பைகளில்

(அடுத்த பக்கம் பார்க்கவும்)



More papers at www.testpapersfree.com

Q5 ____________________ நாளை வீட்டுப்பாடத்தை ஒப்படைக்கவேண்டும் என்பதால் மாலதி சுறுசுறுப்பாகச் செயல்படுகிறாள்.

(1) ஆசிரியரின்
(2) ஆசிரியருக்கு
(3) ஆசிரியரிடம்
(4) ஆசிரியரை



More papers at www.testpapersfree.com

## A2 செய்யுள் / பழமொழி

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

**(10 மதிப்பெண்கள்)**

Q6 மந்திரிக்கு அழகு _______ உரைத்தல்.

(1) உண்மையை
(2) விருந்தோடு
(3) வரும்பொருள்
(4) உள்ளதை

Q7 கற்க கசடறக் கற்பவை _______
நிற்க அதற்குத் தக.

(1) கண்டபின்
(2) கற்றபின்
(3) உணர்ந்தபின்
(4) படித்தபின்

Q8 காலத்தி னாற் செய்த நன்றி சிறிதெனினும்
_________ மானப் பெரிது.

(1) காலத்தின்
(2) பலத்தின்
(3) குலத்தின்
(4) ஞாலத்தின்

Q9 __________ பாராத வேலை ஒரு முழம் கட்டை.

(1) காண்பவன்
(2) உடையவன்
(3) குணவான்
(4) உரியவன்

Q10 ஓதுவது ________________.

(1) பேசேல்
(2) சினம்
(3) ஒழுகு
(4) ஒழியேல்

 (அடுத்த பக்கம் பார்க்கவும்)

More papers at www.testpapersfree.com

A3 அடைமொழி / எச்சம்

Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி / எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q11 அதிகாலையில் ____________ தைப்பூசத் திருவிழா இரவில்தான் முடிவடைந்தது.

(1) துவங்கும்
(2) துவங்கிய
(3) துவங்க
(4) துவங்குகின்ற

Q12 மாணவர்கள் வரிசையில் நின்று தங்கள் நெஞ்சை நிமிர்த்தி, உறுதிமொழியை ____________ கூறினர்.

(1) கம்பீரமாக
(2) சத்தமாக
(3) சத்தமான
(4) விரைவாக

Q13 ____________ பொருட்களைத் தூக்க இயலாமல் வயதான மூதாட்டி தள்ளாடினார்.

(1) கனமான
(2) கனத்து
(3) கனமாக
(4) கனக்கிற

Q14 விமலா ____________ உணவை உட்கொண்டதால் அவளுக்கு வயிற்று வலி ஏற்பட்டது.

(1) அதிகமான
(2) இனிப்பான
(3) கசப்பான
(4) தேவையான

Q15 இன்று காலையில் மழை ____________ இரண்டு மணி நேரம் விடாது பெய்தது.

(1) தொடர்ந்து
(2) தொடர
(3) தொடர்கிற
(4) தொடர்பாக



More papers at www.testpapersfree.com

## A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைப் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

ஒரு கானகத்தில் வயதான நரி ஒன்று இருந்தது. சிறிது தூரம் நடந்தால் போதும் உடனே அது ஓய்வு எடுத்துக்கொள்ளும். ஒரு சமயம், நரி உணவு தேடிச் சிறிது தூரம் நடந்தது. **Q16**______ அடைந்ததால் அது ஒரு புற்றுக்கு அருகே படுத்தது.

அந்தப் புற்றுக்குள் இருந்த பாம்பு, தான் **Q17**______ செல்லும் வழி அடைக்கப்பட்டதைக் கண்டு சினம் அடைந்தது. பாம்பு தன் **Q18**______ பற்களால் நரியைத் தீண்ட வந்தது. அந்த நேரம் கழுகு ஒன்று அவ்வழியே பறந்து வந்தது. நரி இறந்துவிட்டது என எண்ணி அது நரியின் உடல்மீது **Q19**______ நரி கண் விழித்தது. சீறிப் பாய்ந்த பாம்பு நரிக்குப் பதிலாகக் கழுகை **Q20**______. நரியைக் கொத்த வந்த பாம்பு குறித் தவறிக் கழுகைத் தீண்டியது. பாம்பின் விஷம் கழுகின் உடலில் பரவியதால் கழுகு மடிந்தது. யோசிக்கத் தவறியதால் கழுகு தன் உயிரை இழக்க நேரிட்டது.

Q16 (1) உறக்கம்
(2) ஓய்வு
(3) களைப்பு
(4) தாகம்

Q17 (1) வெளியே
(2) உள்ளே
(3) மேலே
(4) முன்னே

Q18 (1) நீண்ட
(2) அழகிய
(3) கூரிய
(4) கொடிய

Q19 (1) அமர்ந்தபோது
(2) நுழைந்தபோது
(3) நகர்ந்தபோது
(4) வெளியேறியபோது

(அடுத்த பக்கம் பார்க்கவும்)



More papers at www.testpapersfree.com

Q20 (1) கொத்திவிட்டது
(2) குதறிவிட்டது
(3) விரட்டிவிட்டது
(4) பார்த்துவிட்டது



More papers at www.testpapersfree.com

Blank Page

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

More papers at www.testpapersfree.com

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**
பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

கார்த்திக் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் மாணவன். அவன் சிறுவயதில் இருந்தே பாடுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தான். அதனால், கார்த்திக் இசை வகுப்பிற்குச் சென்றான். மேலும், கார்த்திக் ஓய்வு நேரத்தில் பாடல்களை இரசித்துப் பாடி நேரத்தைக் கழிப்பான். விடுமுறை நாள்களில் கார்த்திக்கின் பெற்றோர் அவனைச் சங்கீத வகுப்புக்கும் அழைத்துச் செல்வார்கள். அதனால், அவன் சங்கீதப் பாடல்களையும் அருமையாகப் பாடக் கற்றுக்கொண்டான்.

ஒரு நாள் அவனுடைய ஆசிரியர் அவனிடம், “கார்த்திக்! நீ நன்றாகப் பாடுகிறாய். நீ பாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு, நம் பள்ளிக்குப் பெருமையைத் தேடித் தரவேண்டும்,” என்று கூறி அவனைப் பாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளச் சொன்னார். கார்த்திக்கும் பாட்டுப் போட்டியில் கலந்துகொண்டான். அந்தப் போட்டி அவன் இல்லத்துக்கு அருகில் உள்ள சமூக மன்றத்தில் நடைபெற்றது. அதனால், கார்த்திக்கும் அவன் பெற்றோரும் அங்கே சென்றனர். கார்த்திக் மேடையில் இனிமையாகப் பாடித் தன் திறமையை வெளிப்படுத்தினான்.

சில நாட்களுக்குப் பிறகு, அவனுக்கு ஒரு <u>மடல்</u> வந்தது. பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு முதல் பரிசைப் பெற்றுக் கொள்ளும்படி அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. பரிசளிப்பு விழாவின்போது அவன் மேடையில் ஏறித் தன் பரிசைப் பெற்றான். மகனின் வெற்றியைக் கண்ட அவனுடைய பெற்றோர் உவகை அடைந்தனர்.

கார்த்திக்கு ஓர் அழகான கோப்பையும் ஐம்பது வெள்ளிக்கான காசோலையும் பரிசாகக் கிடைத்தன. அவனுடைய நண்பர்கள், “எப்படி முதல் பரிசு கிடைத்தது? அதிர்ஷ்டம் தானே அதற்குக் காரணம்?” என்றனர். அதற்குக் கார்த்திக், “அதிர்ஷ்டம் என்று சொல்ல முடியாது. என் மேல் எனக்கு இருக்கும் நம்பிக்கையும் விடாமுயற்சியும்தான் என் வெற்றிக்குக் காரணம்,” என்று பதில் அளித்தான். நண்பர்கள் அனைவரும் அவனுடைய தன்னம்பிக்கையை எண்ணி வியந்தனர்.



More papers at www.testpapersfree.com

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

**(8 மதிப்பெண்கள்)**

Q21 கார்த்திக் இசை வகுப்புக்குப் போகக் காரணம் என்ன?

(1) அவன் ஓய்வு நேரத்தில் பாடல்கள் பாடியதால்
(2) அவன் போட்டியில் கலந்துகொள்ள விரும்பியதால்
(3) அவன் பள்ளியில் பாடல்கள் பாடியதால்
(4) அவன் பாடுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டதால்

Q22 கார்த்திக்கின் ஆசிரியர் அவனிடம் என்ன கூறினார்?

(1) நன்றாகப் பாடும்படி கூறினார்
(2) பாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளும்படி கூறினார்
(3) பாட்டுப் போட்டியில் இனிமையாகப் பாடும்படி கூறினார்
(4) பாட்டுப் போட்டியில் வென்று பள்ளிக்குப் பெருமை தேடித் தரும்படி கூறினார்

Q23 பெற்றோர் ஏன் உவகை அடைந்தனர்?

(1) கார்த்திக்கின் பரிசைக் கண்டதால்
(2) கார்த்திக்கின் பாடலைக் கேட்டதால்
(3) கார்த்திக்கின் வெற்றியைப் பார்த்ததால்
(4) கார்த்திக்கின் அழைப்பைப் பெற்றதால்

Q24 எதனால் கார்த்திக் வெற்றி பெற்றான்?

(1) அதிர்ஷ்டம் மிகுந்து இருந்ததால்
(2) ஆசிரியர் ஊக்குவித்ததால்
(3) தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் இருந்ததால்
(4) கஷ்டப்பட்டுப் பயிற்சி செய்ததால்

## சொற்பொருள்

**வினா Q25-இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

**(2 மதிப்பெண்கள்)**

Q25 மடல்

(1) தகவல்
(2) கடிதம்
(3) செய்தி
(4) அறிவிப்பு

(அடுத்தப் புத்தகத்தைப் பார்க்கவும்)



More papers at www.testpapersfree.com

Blank Page

More papers at www.testpapersfree.com

## 'ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)

Q26 என் வீட்டிற்கு ஒரு திருமண அழைப்பிதழ் வந்தது. அதன் ________ மிகவும் அழகாக இருந்தது. Q26 (     )

Q27 ஆசிரியர் கற்பித்த ________ மாணவர்கள் மனனம் செய்தனர். பின்பு அதனை ஆசிரியரிடம் கூறினர். Q27 (     )

Q28 செல்வி, கடையில் ஒரு பொம்மையின் ________ மலிவாக இருப்பதைப் பார்த்தாள். அவள், அதைத் தன் தம்பிக்கு வாங்க எண்ணினாள். Q28 (     )

Q29 வெகுநேரம் உடற்பயிற்சி செய்த எனக்கு மிகத் தாகமாக இருந்தது. பழரசம் குடித்து என் தாகத்தை ________ கொண்டேன். Q29 (     )

| | |
|---|---|
| (1) குறளை | (2) விளை |
| (3) தனித்து | (4) உரை |
| (5) விலை | (6) தணித்து |
| (7) உறை | (8) குரலை |

(அடுத்த பக்கம் பார்க்கவும்)



More papers at www.testpapersfree.com

## D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.

# தமிழ்மொழி மற்றும் பண்பாட்டு வாரம்!

தமிழ்மொழி மற்றும் பண்பாட்டு வாரத்தை முன்னிட்டு மாணவர்களுக்காகப் பல போட்டிகள் நடைபெறவுள்ளன. மாணவர்களின் கலைத் திறனையும் மொழி ஆற்றலையும் படைப்பாற்றலையும் வெளிக்கொணர்வதே இப்போட்டிகளின் நோக்கமாகும். இப்போட்டிகள் இலவசமாக நடத்தப்படுகின்றன. எனவே சென்ற ஆண்டைப் போல் இவ்வாண்டும் பல மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்!!

**சிறப்பு விருந்தினர் : செம்பவாங் நாடாளுமன்ற உறுப்பினர்**

**விழாக்குழு ஏற்பாட்டாளர்: சரஸ்வதி நற்பணி மன்றம்**

## உடனே அழையுங்கள்!





**தொடர்புகொள்ள வேண்டிய எண்: 83452981**

போட்டி இடம் பெறும் நாள் : 25-10-2016 ஞாயிறு
நேரம்: மாலை 6.00 மணி
இடம்: தண்டாயுதபாணி மண்டபம்
813 ரேஸ்கோஸ் சாலை
சிங்கப்பூர் 411813



**போட்டிகளின் விவரம்**

| | | |
|---|---|---|
| மாறுவேடப் போட்டி | : | **4** முதல் **6** வயது வரை |
| வண்ணம் தீட்டும் போட்டி | : | **7** முதல் **8** வயது வரை |
| பாட்டுப் போட்டி | : | **9** முதல் **10** வயது வரை |
| கதை சொல்லும் போட்டி | : | **11** முதல் **12** வயது வரை |

**சிறப்பு விருந்தினர் மாணவர்களுக்குக் கவர்ச்சிகரமான பரிசுகளை வழங்குவார்!!**

**மாணவர்களே! போட்டியில் கலந்துகொண்டு பல பரிசுகளை வெல்லுங்கள்!!!**



More papers at www.testpapersfree.com

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

**(10 மதிப்பெண்கள்)**

Q30 இந்தப் போட்டிகளை நடத்துபவர் யார்?

(2 மதிப்பெண்கள்)

(1) தண்டாயுதபாணி மன்றத்தினர்
(2) செம்பவாங் மன்றத்தினர்
(3) சரஸ்வதி நற்பணி மன்றத்தினர்
(4) நாடாளுமன்ற உறுப்பினர்

Q31 போட்டிகளில் பலர் கலந்துகொள்வர் என்பதை ஏன் எதிர்பார்க்கலாம்?

(2 மதிப்பெண்கள்)

(1) கவர்ச்சிகரமான பரிசுகள் கிடைக்கும் என்பதால்
(2) நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினர் வருவார் என்பதால்
(3) போட்டிகள் இலவசமாக நடத்தப்படும் என்பதால்
(4) போட்டிகள் சுவாரசியமானவை என்பதால்

Q32 எந்தப் போட்டியில் 5 வயது சிறுவர்கள் கலந்துகொள்ளலாம்?

(2 மதிப்பெண்கள்)

(1) வண்ணம் தீட்டும் போட்டி
(2) மாறுவேடப் போட்டி
(3) பாட்டுப் போட்டி
(4) கதை சொல்லும் போட்டி

Q33 இப்போட்டிகள் நடத்தப்படுவதன் முக்கிய நோக்கம் என்ன?

(4 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________



(அடுத்த பக்கம் பார்க்கவும்)

More papers at www.testpapersfree.com

**D8 சுயவிடைக் கருத்தறிதல்**
பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

திருமதி மல்லிகா ஒருநாள் சந்தைக்குச் சென்றார். அவர் வீட்டிற்குத் தேவையான காய்கறிகள், பழங்கள், மீன்கள் போன்றவற்றை வாங்கினார். அவற்றைச் சுமக்க முடியாமல் சுமந்துகொண்டு வந்தார். நிறைய பொருட்கள் இருந்ததால் பேருந்தில் செல்லாமல் வாடகை உந்து வண்டிக்காகச் சாலையோரமாக நின்றுகொண்டிருந்தார். சிறிது நேரத்தில் வாடகை உந்து வண்டி வந்தது. உந்து வண்டி ஓட்டுநர் திருமதி மல்லிகாவின் பொருட்களை வண்டியினுள் வைக்க உதவினார். திருமதி மல்லிகா அவருக்கு நன்றி கூறி அமர்ந்தார். பத்து நிமிடங்களுக்குப் பிறகு தம் இருப்பிடத்தை அடைந்தார். திருமதி மல்லிகா பணத்தை ஓட்டுநரிடம் கொடுத்தார். பிறகு, பணப்பையைத் தம் கைப்பையினுள் வைக்கும்போது அது கீழே விழுந்ததைக் கவனிக்கத் தவறினார்.

திருமதி மல்லிகா மின்தூக்கியை நெருங்கியபோது தம்மை யாரோ அழைப்பதை உணர்ந்தார். திரும்பிப் பார்த்தபொழுது உந்துவண்டி ஓட்டுநர் ஓட்டமும் நடையுமாக ஓடோடி வந்தார். ஓட்டுநர் கையில் திருமதி மல்லிகாவின் பணப்பை இருந்தது. அப்பொழுதுதான் தாம் பணப்பையைத் தவற விட்டுவிட்டதை உணர்ந்தார். அந்த வாடகை உந்து வண்டி ஓட்டுநரிடம் காணப்பட்ட நேர்மையைக் கண்டு மனநிறைவு அடைந்த திருமதி மல்லிகா அவருக்கு நன்றி கூறி வெகுமதியும் வழங்கினார். ஆனால், ஓட்டுநர் அதை வாங்க மறுத்துவிட்டார். பிறகு அந்த ஓட்டுநரின் வண்டி எண்ணைக் கேட்டுக் குறித்துக் கொண்டார்.

அந்த நேர்மையான ஓட்டுநரை எண்ணித் திருமதி மல்லிகா வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார். உந்துவண்டி நிலையத்தோடு தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அவரின் நன்னடத்தையைப் பற்றிக் கூறிப் பாராட்டும் தெரிவித்தார். மேலும், அவருக்குச் சிங்கப்பூரின் சிறந்த உந்துவண்டி ஓட்டுநர் என்ற விருது கிடைக்கச் சிபாரிசும் செய்தார்.

வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவருக்கும் அன்பு, பாசம், ஒழுக்கம், நேர்மை போன்ற குணங்கள் இருப்பது இன்றியமையாதவை. இவற்றைப் பெற்றிருக்கும் மனிதன் வாழ்க்கையில் வெற்றியடைவது திண்ணம். நேர்மையானவர்களின் வாழ்க்கை சிறப்பாக அமைவதோடு அவர்கள் பலரின் பாராட்டையும், மதிப்பையும், மரியாதையையும் பெறுவார்கள். உந்து வண்டி ஓட்டுநர் இவற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.



More papers at www.testpapersfree.com

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது.** **(22 மதிப்பெண்கள்)**

Q34 திருமதி மல்லிகா எதற்காகச் சந்தைக்குச் சென்றார்? (2 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q35 திருமதி மல்லிகா பேருந்தில் பயணம் செய்யாததற்குக் காரணம் என்ன?

(3 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q36 தம் பணப்பை தொலைந்ததை, திருமதி மல்லிகா எப்போது உணர்ந்தார்?

(2 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(அடுத்த பக்கம் பார்க்கவும்)



More papers at www.testpapersfree.com

Q37 திருமதி மல்லிகா எதை எண்ணி மனநிறைவு அடைந்தார்? (4 மதிப்பெண்கள்)

Q38 உந்துவண்டி ஓட்டுநர் நேர்மையானவர் என்பதைத் திருமதி மல்லிகா எவ்வாறு பிறர் அறியும்படி செய்தார்? (4 மதிப்பெண்கள்)

Q39 மனிதன் எப்போது வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான்? (3 மதிப்பெண்கள்)



More papers at www.testpapersfree.com

Q40 உந்து வண்டி ஓட்டுநர் செய்த இரண்டு நல்ல செயல்களைச் சுட்டிக்காட்டி நீ உன் நண்பனுக்குக் குறிப்பு எழுது. (4 மதிப்பெண்கள்)

அன்புள்ள மாதவன்,

முற்றும்



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

# SEMESTRAL ASSESSMENT 2

## TAMIL LANGUAGE
## PAPER 2: Language Use & Comprehension
## ANSWER KEY

## Booklet A

வேற்றுமை

1. 4
2. 3
3. 1
4. 2
5. 3

செய்யுள் / பழமொழி

6. 3
7. 2
8. 4
9. 2
10. 4

அடைமொழி / எச்சம்

11. 2
12. 2
13. 1
14. 1
15. 1

முன்னுணர்வுக் கருத்தறிதல்

16. 3
17. 1
18. 4
19. 1
20. 1

More papers at www.testpapersfree.com

தெரிவுவிடைக் கருத்தறிதல்

21. 4
22. 4
23. 3
24. 3

சொற்பொருள்

25. 2

## Booklet B

ஒலி வேறுபாடு

26. 7
27. 1
28. 5
29. 6

கருத்துவிளக்கப்படக் கருத்தறிதல்

30. 3
31. 3
32. 2
33. இப்போட்டிகள் நடத்தப்படுவதன் முக்கிய நோக்கம், மாணவர்களின் கலைத் திறனையும், மொழி ஆற்றலையும் படைப்பாற்றலையும் வெளிக்கொணர்வதே ஆகும்.

சுயவிடைக் கருத்தறிதல்

34. திருமதி மல்லிகா சந்தையில் வீட்டிற்குத் தேவையான காய்கறிகள், பழங்கள், மீன்கள் போன்றவற்றை வாங்கச் சென்றார். (1)

க- 1 மொ- 1

35. திருமதி மல்லிகா பேருந்தில் பயணம் செய்யாததற்குக் காரணம் அவர் சந்தையில் நிறைய பொருட்களை வாங்கிக்கொண்டு (1) தூக்க முடியாமல் தூக்கி வந்ததே ஆகும்(1)

க-2 மொ-1

36. உந்துவண்டி ஓட்டுநரின் கையில் பணப்பையைக் கண்டபோது தம் பணப்பை தொலைந்ததைத் திருமதி மல்லிகா உணர்ந்தார். (1)

க- 1 மொ-1

More papers at www.testpapersfree.com

37. நேர்மை என்பது வாடகை உந்து வண்டி ஓட்டுநரிடம் நிறைந்திருப்பதை (2) எண்ணித் திருமதி மல்லிகா மனநிறைவு அடைந்தார் (1).
    க- 3 மொ- 1

38. வாடகை உந்துவண்டி நிலையத்துடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஓட்டுநரின் நன்னடத்தையைப் பாராட்டினார் (1). மேலும் அவருக்குச் சிங்கப்பூரின் சிறந்த ஓட்டுநர் என்ற பாராட்டுக் கிடைக்க சிபாரிசு செய்தார்(1). இவ்வாறு உந்துவண்டி ஓட்டுநர் நேர்மையானவர் என்பதைத் திருமதி மல்லிகா பிறர் அறியும்படி செய்தார்(1).
    க- 3 மொ- 1

39. அன்பு, பாசம், ஒழுக்கம், நேர்மை (1) போன்ற குணங்களை மனிதன் பெற்றிருக்கும்போது வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான் (1).
    க- 2 மொ- 1

40. உந்து வண்டி ஓட்டுநர் செய்த இரண்டு நல்ல செயல்கள்.(1)ஒன்று திருமதி மல்லிகாவின் பொருட்களை வண்டியினுள் தூக்கி வைத்தது. (1) மற்றொன்று திருமதி மல்லிகாக தவற விட்டப் பணப்பையைத் திருப்பி கொடுத்தது
    க- 2 மொ- 2

(மற்ற ஏற்புடைய விடைகளையும் ஏற்றுக்கொள்ளவும்)

முற்றும்

************

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com